www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

V12Com

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்

முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி 2023

-----

**வகுப்பு 12**

நேரம்: 3.00 மணி **வணிகவியல்** மொத்த மதிப்பெண்கள்: 90

**பகுதி - I**

**குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **20×1=20**

**ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1) ''மேலாண்மை என்பது பன்னோக்கு செயல், அது வியாபாரத்தை மேலாண்மை செய்கிறது, மேலாளரை மேலாண்மை செய்கிறது. மேலும் பணியாளரையும், பணியினையும் மேலாண்மை செய்கிறது'' என்று கூறியவர்
அ) ஜார்ஜ் ஓடியோர்ன் ஆ) ஹென்றி ஃபோயல் இ) பீட்டர் F. டிரக்கர் ஈ) F.W.டேலர்

2) அரசுப்பத்திரங்கள் .............. போன்ற நிறுவனங்களால் வழங்கப்படுகின்றன.
அ) மாநில அரசுகள் ஆ) பகுதி அரசு அமைப்புகள்
இ) மத்திய அரசு ஈ) மேற்கூறிய அனைத்தும்

3) **கூற்று (A)** : மனிதவள மேலாண்மை என்பது கண்ணுக்கு புலனாகாத செயல்பாடு.
**காரணம் (R)** : இதனை முடிவுகளால் மட்டுமே அளவிட முடியும்.
அ) (A) சரி ஆனால் (R) தவறு.
ஆ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)க்கு சரியான விளக்கம்.
இ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)க்கு சரியான விளக்கம் அல்ல.
ஈ) (A) தவறு ஆனால் (R) சரி.

4) இணைய வழி ஆட்சேர்ப்பு என்பது .............. மூலமே சாத்தியம்.
அ) 4ஜி ஆ) கணினி இ) இணையம் ஈ) அகன்ற வரிசை

5) .............. கூட்டம் நிறுமத்தின் வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே கூட்டப்படும்.
அ) சிறப்பு ஆ) சட்டமுறை இ) வகுப்பு ஈ) ஆண்டு பொது

6) நவீன சந்தையியலின் இறுதியான நோக்கம் ..............
அ) நுகர்வோர் திருப்தி ஆ) அதிகமான இலாபம்
இ) சமுதாயத்திற்கு சேவை ஈ) குறைவான இலாபம்

7) ஒரு தனியார் நிறுமத்தில் குறைந்தது .............. இயக்குநர்கள் இருக்க வேண்டும்.
அ) மூன்று ஆ) ஏழு இ) இரண்டு ஈ) ஐந்து

8) **பொருத்துக:**

| | | | |
|---|---|---|---|
| 1. | தலால் தெரு | - | i) நியூயார்க் பங்கு சந்தை |
| 2. | வால் தெரு | - | ii) கனடிய பங்கு சந்தை |
| 3. | லம்பார்டு தெரு | - | iii) பாம்பே பங்கு சந்தை |
| 4. | டொராண்டோ | - | iv) இலண்டன் பங்கு சந்தை |

அ) (1)-(iv), (2)-(ii), (3)-(i), (4)-(iii) ஆ) (1)-(i), (2)-(iii), (3)-(ii), (4)-(iv)
இ) (1)-(ii), (2)-(iv), (3)-(iii), (4)-(i) ஈ) (1)-(iii), (2)-(i), (3)-(iv), (4)-(ii)

9) கீழே கொடுக்கப்பட்டவைகளில் பொருந்தாத இணை எது?
அ) முன்னோக்கிய சந்தை - எதிர்கால சந்தை
ஆ) கடன் சந்தை - அரசுப்பத்திரங்கள்
இ) பணச்சந்தை - வணிகத்தாள்கள்
ஈ) சமநிலைப் பங்குச் சந்தை - கடனீட்டுப் பத்திரங்கள்

10) நுகர்வோரியல் எனும் சொல் தோன்றிய ஆண்டு
அ) 1954 ஆ) 1960 இ) 1958 ஈ) 1957

11) பெரிய நிறுவனங்களின் தொழில் மூலதனத்தில் பங்கேற்க சிறிய முதலீட்டாளருக்கு உதவுவது .............. ஆகும்.
அ) நிலை வைப்புகள் ஆ) பரஸ்பர நிதி
இ) பங்குகள் ஈ) கடனீட்டு பத்திரங்கள்

12) .............. புதிய தொழிற்துறைக் கொள்கையின் விளைவாகும். இதனால் உரிமம் முறை அகற்றப்பட்டது.
அ) தனியார்மயமாக்கல் ஆ) தாராளமயமாக்கல்
இ) உலகமயமாக்கல் ஈ) இவற்றில் எதுவுமில்லை

13) ஒரு நிறுமம் பதிவு செய்யப்பட்ட .............. நாள்களுக்குள் இயக்குநரவை முதற்கூட்டம் கூட்டப்பட வேண்டும்.
அ) 50 ஆ) 45 இ) 30 ஈ) 60

14) சிறப்புத் தீர்மானம் ..............க்கு தேவைப்படுகிறது.
அ) கடனீட்டுப்பத்திரத்தை மீட்க ஆ) பங்காதாயம் அறிவிக்க
இ) இயக்குநரை பணியமர்த்த ஈ) தணிக்கையாளரை பணியமர்த்த

15) நிறுமச் சட்டப்படி இயக்குநர்கள் .............. மூலம் நியமிக்கப்பட வேண்டும்.
அ) மத்திய அரசு ஆ) நிறுமச் சட்டவாரியம்
இ) நிறுமத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் ஈ) இயக்குநர்கள் குழு

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



16) முந்தைய பங்குதாரருக்கு எந்தவித கட்டணமும் இல்லாமல் வெளியிடப்படும் பங்குகள்
அ) ஊக்கப் பங்குகள்
ஆ) சாதாரணப் பங்குகள்
இ) உரிமைப் பங்குகள்
ஈ) முன்னுரிமைப் பங்குகள்

17) ............... இந்தியாவை உலகளாவிய வடிவமைப்பு மற்றும் உற்பத்தி மையமாக மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
அ) டிஜிட்டல் இந்தியா
ஆ) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்
இ) ஸ்டார்ட்டப் இந்தியா
ஈ) வடிவமைப்பு இந்தியா

18) கோழிப்பண்ணை, மலர் வணிகம், பழ உற்பத்தி போன்றவைகைச் செயல்கள் கீழ்குறிப்பிட்ட துறையில் எதனைச் சார்ந்த செயல்?
அ) கூட்டுப்பங்கு நிறுமம்
ஆ) சில்லறை வணிகம்
இ) வணிகம்
ஈ) வேளாண்மை இயல்

19) தொழில் முனைவோரை கீழ் குறிப்பிட்டபடி எப்படி வகைப்படுத்த முடியாது?
அ) இடர்தாங்கி ஆ) புதுமை படைப்பவர் இ) ஊழியர் ஈ) அமைப்பாளர்

20) எத்தனை மாதங்களுக்குப் பின் காசோலை காலாவதியாகிறது?
அ) 3 மாதங்கள் ஆ) 5 மாதங்கள் இ) 4 மாதங்கள் ஈ) 1 மாதம்

## பகுதி - II

**7×2=14**

**குறிப்பு: ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**அதில் 30-வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்.**

21) பகராள் - சிறுகுறிப்பு வரைக.
22) ஒரு நிறுமத்தில் முக்கிய நிர்வாக நபர்களைப் பட்டியலிடுக.
23) கடன் பத்திரங்கள் என்றால் என்ன?
24) நிகழ் சரக்கு என்றால் என்ன?
25) 'விற்பனையாளர் ஜாக்கிரதை' - விளக்கு.
26) ஜான் F. கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை?
27) காளை - விளக்குக.
28) துணிகர நிதி நிறுவனங்கள் - விளக்குக.
29) டிஜிட்டல் இந்தியா - குறிப்பு வரைக.
30) மாற்றுமுறை ஆவணத்தில் மேலெழுதிட இடம் போதவில்லையென்றால் எவ்வாறு மேலெழுதலாம்?

## பகுதி - III

**7×3=21**

**குறிப்பு: ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 40-க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

31) செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன?
32) வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளில் மூன்றினைக் கூறுக.
33) சாதாரண தீர்மானம் தேவைப்படும் ஏதேனும் மூன்று செயல்பாடுகளைத் தருக.
34) தனியார்மயமாக்கல் என்றால் என்ன?
35) பங்குச்சந்தை என்றால் என்ன?
36) நிவாரணத்திற்கான உரிமைகள் பற்றி நீவிர் அறிவது யாது?
37) மேலாண்மை வரைவிலக்கணம் தருக.
38) பல வகையான திறந்த மற்றும் இரகசிய வாக்கெடுப்பு முறைகளைக் கூறுக.
39) மேலாண்மையை நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்துக. (ஏதேனும் 3)
40) X பொது வரையறு நிறுமம் நேர்மைப் பங்குகள் மற்றும் முன்னுரிமைப் பங்குகளை வெளியிட்டது. சில ஆண்டுகளுக்குப் பிறகு அந்நிறுமம் கலைப்பிற்குள்ளானது. நிறும கலைப்பின் போது எவ்வகைப் பங்குநர் தங்கள் பங்குமுதலை முதலில் திரும்பப் பெறுவர்? விளக்குக.

## பகுதி - IV

**7×5=35**

**குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

41) அ) நிறுமச் செயலரின் பணிகளை விளக்குக. **(அல்லது)**
ஆ) நவீன மேலாண்மைக் கோட்பாடுகளில் ஏதேனும் ஐந்தினை விவரி.

42) அ) தொழில் முனைவோரின் சிறப்பியல்புகள் ஏதேனும் ஐந்தினை விளக்குக. **(அல்லது)**
ஆ) இயக்குநரின் பல்வேறு வகைகளை சுருக்கமாக விவரி.

43) அ) விதிவிலக்கு மேலாண்மையின் நன்மைகள் யாவை? **(அல்லது)**
ஆ) கடன் பத்திரங்களின் வகைகள் ஏதேனும் ஐந்தினை விவரி.

44) அ) நுகர்வோரின் உரிமைகளில் ஏதேனும் ஐந்தினை விளக்குக. **(அல்லது)**
ஆ) செல்தகு மேலெழுத்தின் அடிப்படைக் கூறுகளைக் கூறுக.

45) அ) குறிப்பு வரைக: (1) புறத்திறனீட்டல் (2) வேட்டையாடுதல் **(அல்லது)**
ஆ) தொழில்முனைவோர் மற்றும் அகத் தொழில்முனைவோர் இவர்களை வேறுபடுத்துக.

46) அ) அரசுப் பத்திரங்களின் இயல்புகளை விவரி. (ஏதேனும் 5) **(அல்லது)**
ஆ) செபியின் அதிகாரங்களை விவரி.

47) அ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகிறார்கள்? **(அல்லது)**
ஆ) திருமதி. மஹாலட்சுமி என்பவர் புதிய தொழில் ஒன்றைத் தொடங்க விரும்புகிறார். அவரது தொழில் பிரயாணத்தில் எதிர்கொள்ளும் ஐந்து சவால்களை விவரிக்கவும்.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com